1995 நவம்பர் 10]

போடப்பட்டிருக்கிற, ஒரு நாளைக்கு ஒரு தடவைதான் அங்கே குடிநீர் வழங்குகிற நிலைமை உருவாகிய காரணத்தினாலேதான் இந்த மாற்றுத் திட்டத்தை இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் ஆய்வு செய்தது. அங்கே ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கிடைக்கிறது; தாழ்வான பகுதிகளிலே தினமும்கூட கிடைக்கிறது; மேடான பகுதிகளிலே இரண்டு நாட்கள்கூட ஆகிறது என்று அங்கேயிருந்து பல்வேறு கோரிக்கைகள் வந்த காரணத்தினாலேதான் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்ற அடிப்படையிலே இந்தத் திட்டத்தை எடுக்கச் சொல்லி இன்றைக்கு இந்தத் திட்டம் ஆய்விலே இருக்கிறது என்று சொன்னேன். இன்றைக்கு எந்தவொரு குடிநீர்த்திட்டமும் குடிநீர் ஆதாரத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

முற்பகல் 11-10

நிலத்தடி நீர் இல்லையென்று சொன்னால் அங்கே குடிநீர் வழங்க முடியாது. அதேபோல் திட்டத்தினுடைய மதிப்பீட்டையும் பார்க்க வேண்டும். பேச்சிப்பாறை அணையோ அல்லது மற்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய ஜீவ நதியோ என்று சொன்னால், அது தொலை தூரத்திலே இருக்கும். அங்கே இருக்கின்ற மதிப்பீட்டையும் பார்க்க வேண்டும். வெகுதூரத்திலேயிருந்து நாம் குடிநீர் கொண்டுவரும்போது அதிக மதிப்பீட்டுத் தொகை தேவைப்படுகிறது. பல்வேறு நகரங்களுக்கு அங்கே தண்ணீர் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இந்த அனந்தனார் கால்வாயிலிருந்து எடுக்கலாம் என்று வாட்டர் யுட்டிலைசேஷன் கமிட்டி இன்றைக்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறது. இருந்தாலும் அந்த விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்ல எண்ணத்திலும் இன்றைக்கு அரசு செயல்பட்டு வருகிறது. எந்த அளவிற்குக் கால்வாயிலே தண்ணீர் வருகிறது, எவ்வளவு நாட்களுக்கு வருகிறது, எவ்வளவு நீர் எடுக்க முடியும், பாசனத்திற்கு எவ்வளவு நீர் தேவைப்படுகிறது என்பதையெல்லாம் கணக்கிலே எடுத்துதான் இன்றைக்கு 326 கன அடி தண்ணீர் அங்கேயிருந்து எடுக்கலாம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட அங்கே விவசாயிகள் ஏதாவது பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படும் என்று சொன்னால், அரசு எக்காரணம் கொண்டும் இந்தத் திட்டத்தை விவசாயிகளை பாதித்து எடுக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேறு நீராதாரம் இருந்தாலும் அதையும் மீண்டும் ஆய்வுக்கு எடுத்து அரசு பரிசீலிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு மீளைத் துறை அமைச்சர்.

97—

பிரேக் வாட்டர் திட்டம் உருவாக்குதல்

*17570—**திரு. மா. சுந்தரதாஸ்:**

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்பட்டினத்தில் பிரேக் வாட்டர் திட்டம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்பட்டினத்தில் 'பிரேக் வாட்டர் திட்டம்' உருவாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை எழவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, இந்த பிரேக் வாட்டர் ஸ்கீம் முக்கியமான ஒரு அருமையானத் திட்டம். பல்வேறு தொண்டு நிறுவனங்கள் உலக வங்கியிலுள்ள அதிகாரிகளை அணுகி பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு மாநிலத்திலே பணம் இல்லையென்றாலும்கூட, அதிகமாக அன்னியச் செலாவணி ஈட்டிக் கொடுக்கின்ற மீன்வளத்தில் அதிகமான பணத்தை செலவழிக்க உலக வங்கி தயாராக இருக்கிறது. அந்தத் திட்டத்தை எடுத்து, நம் மாநிலத்தில் பணம் இல்லையென்றாலும்கூட, உலக வங்கியை கேட்டாவது எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னபடி

1995 நவம்பர் 10]

இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாக இந்தியத் திருநாட்டிற்கு அன்னியச் செலாவணி ஈட்டித் தருக்கின்ற ஒரு சிறப்புமிகு மாநிலமாக நம்முடைய புரட்சித் தலைவி ஆளுகின்ற தமிழக மாநிலம் 700 கோடி ரூபாயிக்கு மேல் அன்னியச் செலாவணி ஈட்டித் தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இதற்கு மத்திய அரசு நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்கின்ற தொகை என்று பார்த்தால் மிகமிகக் குறைவு. ஏறக்குறைய 1983 ஆம் ஆண்டிலிருந்து சிறிய மீன்பிடி துறைமுகங்கள், தங்கு தளங்கள் மற்றும் பெரிய மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கின்ற பணி நடைபெற்றதா என்றால் இல்லை. இதுகுறித்து மத்திய மீன்வள ஆய்வுக் கூட்டத்திலே நம்முடைய புரட்சித் தலைவியினுடைய கருத்தை, புதிய சிறிய தங்கு தளங்கள், பெரிய மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் Fishing Harbour எல்லாம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னபோது, நம்முடைய புரட்சித் தலைவியினுடைய கருத்தை ஏற்று இன்றைக்குதான் அவர்கள் பிரைவேட் ஸ்டெடி கன்டெக்ட் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தமிழகத்தினுடைய கடற்கரையோரங்களில் எங்கெல்லாம் சிறு துறைமுகங்கள், நடுத்தர துறைமுகங்கள், பெரிய துறைமுகங்கள் அமைக்க வேண்டுமென்கிற அந்தக் கருத்துரு ஆராயப்பட்டு வருகிறது. ஏற்கெனவே கன்னியாகுமாரி மாவட்டத்தை பொறுத்தமட்டிலே சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகமும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள் என்றே நான் கருதுகிறேன்.

திரு. மா. **சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே பார்த்தால் தமிழ்நாட்டிலே நாங்கள் இருந்தாலும்கூட எங்களுடைய நேட்ச்சுராலிட்டி கேரளாவிலுள்ள கல்ச்சரைப் போல இருக்கும். கேரளாவிலே பார்த்தால், ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு fishing harbour வைக்கிறார்கள். அதிலும் அமைச்சராக முல்லப்பள்ளி ராமச்சந்திரன் இருக்கும்போது - அவர் என்னுடைய நண்பர், அவரை நான் கேட்டேன் - தமிழகத்திலேயிருந்து புரப்போசலே வரவில்லையென்றால் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார். இங்கே நான் கேட்டுக்கொள்வது, மத்திய அரசினுடைய பணத்தை வாங்கலாம், இந்தத் திட்டம் முக்கியமானத் திட்டம், ஏனென்று சொன்னால் குளித்தலையாறு அந்த இடத்திலே சேருகின்றது. ஆறு சேருகின்ற இடத்திலேதான் மீன் அதிகமாக வளரும் என்று சொல்வார்கள். அந்தப் பகுதியிலே நாம் இந்த பிரேக் வாட்டர் ஸ்கீம் வைத்தால் நிச்சயமாக அதிக மீன் கிடைக்கும், மீனவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆகையால், நான் கேட்டுக்கொள்வது,